சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் – 2016–17–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்ககத்தை மேம்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (பொ.நூ.2) த்துறை

அரசாணை(நிலை) எண்.235

நாள் 20.12.2016
திருவள்ளுவராண்டு, 2047
மார்கழி 5

படிக்கப்பட்டவை:-

1. பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது சட்டமன்றப் பேரவையில் 09.08.2016 அன்று மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்புகள்
2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க. எண்.3973/அ1/2016, நாள் 29.08.2016 மற்றும் 12.09.2016

*********

ஆணை:–

2016–17–ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள நலிவுற்ற மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினருக்கான 25% இட ஒதுக்கீட்டின்படி, தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கான கல்விக் கட்டணத்தை ஈடுசெய்திடும் பணி மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதற்கென 1 உதவி கணக்கு அலுவலர் பணியிடம், 1 கண்காணிப்பாளர் பணியிடம், 2 உதவியாளர் பணியிடங்கள், 2 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 2 தட்டச்சர் பணியிடங்கள் அளிக்கப்படும். அப்பணியிடங்கள் பணி நிரவல் மூலம் நிரப்பப்படும் ''

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள கடிதத்தில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 சட்டமாக்கப்பட்டு, அதற்கான தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 வகுக்கப்பட்டன என்றும், மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் இச்சட்டத்தின் பிரிவு 12 (1) (சி) இன்படி சிறுபான்மையற்ற தனியார் சுயநிதிப் பள்ளிகளில் நுழைவு நிலை வகுப்பில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகளுக்கு 25% இடஒதுக்கீடு வழங்கப்பட்டு சேர்க்கை செய்யப்படுவதை செயலாக்கம் செய்ய முதன்மைத் தொடர்பு அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்றும், மேற்படி இடஒதுக்கீட்டின் கீழ் 2013–2014 முதல் 2015–2016 ஆம் ஆண்டுவரை கீழ்க்குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையில் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் சேர்க்கை செய்யப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்:–

| வ.எண் | ஆண்டு | சேர்க்கை செய்யப்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | 2013-2014 | 49,864 |